கோவில்பட்டி நகராட்சி

**மன்மத – ஹேவிளம்பி வருடம் ஆவணி மாதம் 16–ஆம் ஆங்கில வருடம் செப்டம்பர் மாதம் 01.09.2017–ம் தேதி வெள்ளிக் கிழமை விவாதித்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அவசரக் கூட்டப் பொருள்களின் விபரம்**

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் படி கேளிக்கை வரி விலக்களிப்பது குறித்தோ அல்லது தள்ளுபடி செய்வது குறித்தோ தீர்மானம் நிறைவேற்றுவது.

| மன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 01.09.2017 | **பொருள் எண்.1**<br>1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனையை கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 1.7.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது | **2759.** அங்கீகரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம். இச்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடித எண்.14781 / தேர்தல் / 2017–1, நாள்: 1.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>தீர்மானம்</u>**<br>2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20 / 2017) , பிரிவு 11–ன் படி, அச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை செலுத்தும் கடப்பாட்டிலிருந்து, அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பதற்கும் (EXEMPTION); மேலும் எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி முழுவதையுமோ | |

| | | |
|---|---|---|
| | அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ தள்ளுபடி (REMISSION) செய்வதற்கும் மன்றம் தீர்மானம் இயற்றி அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம் என்ற சட்ட வகைமுறைகளின் அடிப்படையில் மேற்படி கோரிக்கைகள் குறித்து மன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது.<br>அதன்படி, மாநகராட்சிகளின் / நகராட்சிகளின் / பேரூராட்சிகளின் நலன் கருதியும் மற்றும் அரசுக்குள்ள கடப்பாடுகளை செவ்வனே நிறைவேற்றும்பொருட்டு,-<br>(1) அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் கேளிக்கைவரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கவும்;<br>(2) எந்த ஒரு கேளிக்கைகள் அல்லது கேளிக்கைகளின் வகைகள் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் பொறுத்தும் கேளிக்கை வரி முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் முன்தேதியிட்டோ அல்லது பின்தேதியிட்டோ அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரியை தள்ளுபடி செய்யவும்; மற்றும்<br>(3) மேலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் போன்று அரசு பொருத்தமெனக் கருதும் பிறவற்றின் மீது பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கவும்,<br>**அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | **<u>பொருள் எண். 2</u>**<br>சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3, 6 மற்றும் 25-களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை | **2760.** அங்கீகரிக்கப்படுகிறது. |

பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ இயற்றியுள்ளது. இதனை நகராட்சி பகுதிகளில் அமுல்படுத்திட கீழ்கண்டவாறு துணை விதிகள் இயற்றப்பட வேண்டியுள்ளது.

**கோவில்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் கீழ் இயற்றப்பட்டது.**

1) **தலைப்பு**: இது கோவில்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 என்று அழைக்கப்படும்.

2) **செயல்பாடு எல்லை**: இந்தத் துணை விதிகள் கோவில்பட்டி நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொது இடங்களுக்கும் மற்றும் நகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3) **வரையறை:** இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே கோவில்பட்டி நகராட்சி சட்ட (**மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920**)-த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்கண்ட சொற்களின் பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

**“சட்டம்” :- சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (29 of 1986)**

**(a)** **அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள்:-** (Brand owner) பதிவு செய்யப்பட்ட சின்னத்தின் கீழ் அல்லது பெயரின் கீழ் பொருள்கள் விற்கும் நபர் அல்லது நிறுவனம்.

**(b)** **தூக்குபைகள்**: - பொருள்களை சுமந்து செல்லும் வகையில் பிளாஸ்டிக் பொருள்கள் அல்லது மக்கும் தன்னையுள்ள பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்ட ஒரு சுமை தாங்கும் அம்சம் கொண்ட பைகள்.

| | | |
|---|---|---|
| | **(c)** **சரக்கு:-** விற்கவோ அல்லது வாங்கவோ செய்யப்படும் அனைத்து சந்தைப்படுத்தப்படும் பொருட்கள் அல்லது சாதனங்கள்.<br>**(d)** **உரமாகும் பிளாஸ்டிக்:-** உயிரியல் செயல் முறைகள் மூலம் பிளாஸ்டிக் உடைதலுக்கு உள்ளாக்ககூடிய வழக்கமான பெட்ரோ சார்ந்த பிளாஸ்டிக் தவிர்த்து அழைக்கப்படுகின்ற பிளாஸ்டிக்.<br>**(e)** **சிதைவு:-** ஒரு பொருளை மிகவும் சிறிய துண்டுகளாக ஆக்குதல்.<br>**(f)** **அங்கீகாரம்:-** மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுகட்டுப்பாட்டுக்குழு உள்ளாட்சி அமைப்பிற்கோ அல்லது நிறவனத்திற்கோ அனுமதி அளித்தல்.<br>**(g)** **துணை விதிகள்:-** உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைகளுக்குள் விதிகளை திறம்பட செயல்படுத்தி எளிதாகவும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு.<br>**(h)** **நீடித்த தயாரிப்பாளர்கள் பொறுப்பு:-** பிளாஸ்டிக், தகரம், கண்ணாடி மற்றும் நெளி பெட்டிகள் போன்ற பொருட்களின் இறுதிநிலை வரை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் பாதுகாப்பு தயாரிப்பாளரின் பொறுப்பு.<br>**(i)** **உணவு பொருள்கள்:-** சாப்பிட தயாராக உள்ள உணவு பொருள்கள் விரைவு உணவு, பதப்படுத்தப்பட்ட அல்லது திரவ உணவு, உணவுத்தூள் ஆகியவை உணவுப்பொருள்களில் அடங்கும்.<br>**(j)** **வசதி:-** பிளாஸ்டிக் கழிவுகள் தொகுப்பு, சேமிப்பு மறு சுழற்சி, செயலாக்கம் மற்றும் அகற்றல் ஆகியவை மேற்கொள்ளப்படும் வளாகங்கள்.<br>**(k)** **உற்பத்தியாளர்:-** ஒரு நபர் அல்லது நிறுவனம் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுவது.<br>**(l)** **பிளாஸ்டிக் தாள்:-** பிளாஸ்டிக் பொருளால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் தாள்.<br>**(m)** **பிளாஸ்டிக் கழிவுகள்:-** பிளாஸ்டிக், பயன்படுத்திய பிறகு | |

| | | |
|---|---|---|
| | அல்லது திட்டமிட்ட பயன்பாடு முடிந்தவுடன் அப்புறப்படுத்தப்படுகின்ற பொருள்கள்.<br>**(n)** **மறுசுழற்சி**:- ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து புதிய தயாரிப்பு செய்வது.<br>**(o)** **தண்டம் (Fine)**:- பிளாஸ்டிக கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள், செயலாக்கம் செய்பவர்கள் ஆகியோர் விதிகள் மற்றும் துணைவிதிகளை மீறும் பட்சத்தில் விதிக்கப்படும் தண்டம்.<br>**(p)** **முறைசாரா கழிவு சேகரிப்பவர் (Informal Waste Collector)**:- மறுசுழற்சி பொருள்களை சேகரித்தல், வகைப்படுத்துதல், விற்பனை செய்தல், தனிநபர்கள், சங்கங்கள், அல்லது கழிவுப்பொருள்கள் பணியில் ஈடுபடும் கொள்முதல் செய்யும் வர்த்தகர்கள்.<br>**(q)** **உள்ளாட்சி (Local Body)**:- இந்த விதிகளை செயல்படுத்தும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நகரசபை, நகர் நிகாம், மாநகரசபை, நகர் பாலிகா, பரிஷத், நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சி, வரையறுக்கப்பட்ட (Notified) பகுதிகள் வரையறுக்கப்பட்ட தொழிற்துறை குடியிருப்புகள் (Notified Industrial Townships) என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமைப்புகள்.<br>**(r)** **பொருட்கள் மீட்பு வசதி (Materials Recovery Facility)**:- உள்ளாட்சி அமைப்புகளாலோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாலோ திடக்கழிவுகளிலிருந்து மறுசுழற்சிக்குரிய முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்டவர்களால் மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட வசதி.<br>**(s)** **வகை பிரித்தல் (Sorting)**:- கலவையான கழிவுகளிலிருந்து பொருத்தமான கழிவுகளை பல்வேறு கூறுகளாக காகிதம், பிளாஸ்டிக், உலோகங்கள், | |

| | | |
|---|---|---|
| | கண்ணாடி என மறுசுழற்சி பொருள்களாக பிரித்தல்.<br>**(t)** **தெருவிற்பனையாளர் (அ) தெரு ஓர சாலை வியாபாரிகள் (Street Vendors):-** ஒரு தெரு, சந்து, பக்க நடைபாதை, நடைபாதை, பொது பூங்கா அருகில் அல்லது வேறு எந்த பொது இடத்திலோ அல்லது தனியார் பகுதியில் ஒரு தற்காலிகமாக கட்டியெழுப்பப்பட்ட அமைப்பில் இருந்தோ, அல்லது ஒரு இடத்திலிருந்து மற்ற இடத்திற்கு நகர்ந்து சென்றோ, சுற்றிதிரிந்தோ உணவுபொருள்கள், காய்கறிகள், பழங்கள், அன்றாட பயன்பாட்டு பொருளையோ விற்பவர்கள்.<br>**(u)** **கழிவு உருவாக்குபவர் (Waste Generator):-** ஒரு நபர் அல்லது குழு குடியிருப்புகள் அல்லது குடியிருப்பு அல்லாத இடங்களில், வணிகநிறுவனங்கள், இந்திய ரயில்வே பகுதிகள், மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட திடக்கழிவு உருவாக்கபவர்களை குறிக்கும்.<br>**(v)** **முகமை (Agency):-** தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் பெறுதல் போன்றவற்றிற்காக, முகமைக்கும் கோவில்பட்டி நகராட்சிக்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆற்றும் கோவில்பட்டி நகராட்சியில் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனம்.<br><br>**4) கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள்:**<br><br>(1) கழிவு உருவாக்கும் ஒவ்வொருவரும் பிளாஸ்டிக் கழிவு உருவாக்கத்தை குறைக்கவும், பிளாஸ்டிக் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரிக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அல்லது அவ்வப்போது ஏற்படுத்தக்கூடிய விதிகளின் கீழ் செயல்பட வேண்டும்.<br>(2) 50 மைக்ரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அடர்த்தி அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறுசுழற்சிக்கான | |

| | | |
|---|---|---|
| | அல்லது மக்கக்கூடிய கைப்பைகளை எந்த ஒரு நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது. மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.<br>(3) நகராட்சி எல்லைக்குள் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்பைகள், பிளாஸ்டிக் கேரிபைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுக்கள், பிளாஸ்டிக்கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் ஆகியவையும் தடை செய்யப்படுகின்றன. மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.<br>(4) மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கைப்பைகளைக்கொண்டு உணவுப்பொருள்களை சேமிக்கவோ அல்லது எடுத்துச்செல்லவோ விற்பனை செய்யவோ அல்லது மொத்தமாக கட்டவோ கூடாது.<br>(5) பிளாஸ்டிக் கழிவுகளை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, சாலை ஓரங்களிலோ, நீர்கால்களிலோ, நீர்நிலைகளிலோ போடக்கூடாது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.<br>(6) வீடுகளில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்க வேண்டும்.<br>(7) உணவு விடுதிகள், பிற நிறுவனங்கள், அலுவலகங்கள், | |

| | | |
|---|---|---|
| | ஆகியவற்றில் உருவாக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ வழங்க வேண்டும்.<br>(8)கழிவுகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகள் சேகரிப்பு மற்றும் மேலாண்மை வசதிகளுக்குரிய பயனர் கட்டணம் செலுத்தவேண்டும்.<br>(9) திறந்த வெளியில் நிகழ்ச்சி நடத்தும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நிகழ்ச்சியின் போது உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.<br>(10) பிளாஸ்டிக் கழிவுகள் உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற பிளாஸ்டிக்கை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, நீர் நிலைகளிலோ எறிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.<br>**5) குறியீடு மற்றும் பெயரிடல் (Marking and Labelling):-**<br>(1) ஓவ்வொரு பிளாஸ்டிக் கேரிபையிலும் கீழ்கண்ட விவரங்கள் தமிழ் (அ) ஆங்கிலத்தில் அச்சடித்து இருக்க வேண்டும்.<br>a) தயாரிப்பாளர் பெயர், பதிவுஎண், தூக்குப் பையின் அடர்த்தி (Thickness)<br>b) பல அடுக்கு பைகளாக (Multi Layered Packing) இருப்பின் தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் குறிப்பிட வேண்டும் | |

| | | |
|---|---|---|
| | (2) ஒவ்வொரு மறுசுழற்சி பைகளிலும் “மறு சுழற்சிக்கானவை” என இந்திய தர நிர்ணயம் IS.14534.1998 இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதனடிப்படையில் அவ்வப்போது மறுசுழற்சிக்கான பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.<br>(3) ஒவ்வொரு மக்கும் கைப்பைகளிலும் “மக்கக்கூடியவை” என இந்திய தர நிர்ணயம் IS.17088.2008-இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதனடிப்படையில் அவ்வப்போது பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.<br><br>**6) கடைக்காரர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாள்கள் பொறுப்பு**<br>(1) சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் விதிகள் கீழ் பரிந்துரைக்கப்படும் குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரிபைகள் அல்லது பிளாஸ்டிக் தாள், அல்லது பலஅடுக்கு பேக்கேஜ் ஆகியவற்றை விற்கவோ அல்லது அவற்றில் பொருள் வழங்கவோ கூடாது. அவ்வாறு விற்பது தண்டனை குற்றம். இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.<br>(2) பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லரை விற்பனையாளர்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ48,000 (மாதம் ரூ.4000) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்யவேண்டும். ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்கவேண்டும்.<br>(3) நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்கள் பிளாஸ்டிக் கேரிபைகள் வழங்க கட்டணம் வசூலிக்கப்படும் என முக்கிய இடத்தில் காட்டவேண்டும். | |

(4)நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கடைகாரர்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் மட்டுமே கேரிபைகள் வழங்க தகுதி உடையவர்கள் பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனைபொருள்கள் வழங்குதல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றம் இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

**7) நகராட்சியின் கடமைகள்**

(a) பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள், தெரு விற்பனையாளர்களினை பதிவு செய்து சான்று வழங்கல்.

(b) பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து இருப்பு வைத்து தரம் பிரித்து எடுத்துச் சென்று முடிவு செய்தலை உறுதி செய்ய வேண்டும்.

(c) பிளாஸ்டிக் கழிவுகளை முடிவு செய்யும் போது சுற்றுப்புற சூழல் பாதிக்காத வண்ணம் மேற்கொள்ள வேண்டும்.

(d) பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியில் தயாரிப்பாளர்களையும் பங்கு பெற செய்ய வேண்டும்.

(e) மறு சுழற்சிக்கான வழிகளை உறுதி செய்ய வேண்டும்.

(f) கழிவுகளை கையாளும் பணியில் தனியார் நிறுவனங்கள் குழுக்கள் மற்றும் கழிவு சேகரிப்போரையும் பங்கேற்க செய்ய வேண்டும்.

(g) பிளாஸ்டிக் கழிவுகளை் எரிப்பதை தடை செய்து அதனை உறுதி செய்ய வேண்டும்.

(h) தகவல், கல்வி, தொடர்பின் மூலம் பொதுமக்களுக்கும் கழிவுகளை உற்பத்தி செய்பவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**8) இந்த துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்**

1. இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை-1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர்

இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

2. துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை-1ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத் தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன் / அவள்-க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

## 9) தண்டணை

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டணைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

## 10) மேல் முறையீட்டிற்கு உரிமை

கோவில்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2016 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் கோவில்பட்டி நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற பின் நடைமுறைக்கு வந்துள்ளன

11) அபராதக்கட்டணம்

**அட்டவணை :- I**

| வ. எண் | துணை விதிகள் | உட்பிரிவும்/துணைவிதிகள் விளக்கமும் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை (ஒவ்வொரு நிகழ்வுக்கும்) |
|---|---|---|---|
| 1 | 4(2) | 50 மைக்ரான் அடர்த்திக்கு குறைவான பிளாஸ்டிக் கேரிபைகள்பயன்படுத்துதல் | பொருள் பறிமுதலுடன் |
| | | தயாரித்தல் | 5000/ |
| | | இருப்பு வைத்தல் | 1000/ |
| | | விநியோகித்தல் | 1000/ |
| | | விற்பனைசெய்தல் | 1000/ |
| 2 | 4(3) | ஒரு முறையே பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிபைகள், தட்டுகள், டம்ளர்கள், மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் | பொருள் பறிமுதலடன் 1000/ |
| 3 | 4(4) | பிளாஸ்டிக் பைகளில் உணவு பொருள்களை சேமித்தல், விற்பனை செய்தல். | பொருள் பறிமுதல் 1000/ |
| 4 | 4(5) | பிளாஸ்டிக் கவர்களை நீர்நிலைகளில் போடுதல் | 1000/ |

| | | | |
|---|---|---|---|
| 5 | 4(6) | வீடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து தனியே வழங்காமல் இருத்தல் | 100/ |
| 6 | 4(7) | உணவகங்கள், அலுவலகங்கள், பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து தனியே வழங்காமல் இருத்தல் | 500/ |
| 7 | 4(8) | திறந்த வெளியில் நிகழ்ச்சி நடத்துபவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக வழங்காமல் இருத்தல் | 1000/ |
| 8 | 4(9) | பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தல்<br>தனி நபர்<br>நிறுவனம | 200/<br>500/ |
| 9 | 6(1) | குறியீடு அல்லது பெயர் இல்லாத பிளாஸ்டிக் பைகள் விற்பனை அல்லது பொருள்கள் வழங்குதல் | பொருள் பறிமுதல்<br>1000/ |
| 10 | 6(4) | பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை செய்தல், பொருள் வழங்குதல் | பொருள் பறிமுதல்<br>5000/ |

**அ.கு:-**

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ இந்நகர் பகுதிகளில் அமுல்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-306ன் படி நகர்மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி துணைவிதிகள் ஏற்படுத்த ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.5906/2017/எச்1

**பொருள் எண். 3**

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீருக்கு கட்டணம் உயர்வு செய்யவும் புதிதாக வழஙகப்படும் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை உயர்வு செய்யவும் 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 130, 131, 132, 132 (அ), 134, 135, 306(3) (டி) முதல் (ஐ) வரை 308, 309 மற்றும் 310 பிரிவுகளின்படி இயற்றப்பட்ட குடிநீர் விநியோக துணை விதிகள் கீழ்கண்டவாறு திருத்தம் செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**கோவில்பட்டி நகராட்சி**

**குடிநீர் விநியோக உபவிதிகள்**

கோவில்பட்டி நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு எண்கள.130,131,132,132a, 134,135, 306(3) d,e,f,g, h மற்றும், i 308,309, 310 ன்கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்

கோவில்பட்டி நகராட்சியில் புதியதாக வீட்டுக்குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இணைப்புகளும் அடஙகும். இந்த விதிகளின்கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் அளவைக் கணக்கிடவும் குடிநீர் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர்க்குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்தத் துணைவிதிகளில் இடம் பெறுகின்றன.

**1)** குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் துணை விதிகள் சட்டம் 131 மற்றும் 132 மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) இல் கண்டுள்ள கட்டண விகிதஙகள் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி ஆணை பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.

**2761.** அங்கீகரிக்கப்படுகிறது.

அ) குடிநீர் இணைப்பிற்காக மொத்த மதீப்பீட்டு கட்டணத்தில் 15 சதவீதம் நூற்றுவீதக் கட்டணம் (Centage) மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்த அளவு ஆய்வுக் கட்டணம் ரூ.750/– வசூலிக்கப்படும்.

| நீளம் மீட்டரில் | கருங்கல்லி சாலை(2017–18) | தார்சாலை(2017–18) | சிமெண்ட் சாலை(2017– |
|---|---|---|---|
| 0–30 | 1825 | 4392 | 4629 |
| 0–90 | 5664 | 12943 | 13673 |

ஆ) குடிநீர்த் திட்டத்தில் அரசுக் கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்திய பின்னர் இணைப்பு ஆணை வழுங்கப்படும்

இ) மேற்கண்ட கட்டணங்களில்குறிப்பிட்டுள்ள இனஙகளுக்கான வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் வேறு இனஙகளுக்கு வரவு வைக்கப்படமாட்டாது.அத்துடன் செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

ஈ) குடிநீர் இணைப்பிற்கான நூற்று வீதக்கட்டணம் மற்றும் ஆய்வுக்கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் 5 % கூடுதலாக்கப்பட்டு அதன் படி கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

**1)**குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்தச் செலவில் நகராட்சி பகிர்மானக்குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

**2)** குடியிருப்பு பயன்பாட்டிற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் குழாய் அளவு விகிதத்தில் (Tap rate) உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்புத் துண்டிக்கப்படும்.

**3)** வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரணங்களுக்கானதா அல்லது குடும்பக் காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள 1920ம் ஆண்டு கோவில்பட்டி நகராட்சி சட்டத்தின் 132.வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரையின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

**4)** அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடியிருப்பு பயன்பாட்டிற்கும் அவையல்லாத பிற பயன்பாட்டிற்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடியிருப்புக்கு அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதங்களில்

கட்டணம் வசூலிக்கப்படும். சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டிய இனங்களுக்கு நகர்மன்ற அனுமதியுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமையான நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான பயன்பாட்டை பொறுத்து குடியிருப்பு அல்லது அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டும்போதும், கூடுதல் கட்டிடம் கட்டும்போதும், பெரிய பழுதுகள் பார்க்கும்போதும், நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது பயன்படுத்துவதாக ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத பயன்பாடாக கருதப்பட்டு வணிகக் காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஈ) தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறுகளுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

**5)** ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர்க்குழாய் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பைக் கட்டுப்படுத்த திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் புதிய இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்பட மாட்டாது.

விளக்கம் – இத்துணை விதிகளில் இடம் பெறும் குடியிருப்பு (வீடு) என்பது ஒரு பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைய சொத்துவரிக்காக ஒரே பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் குறிக்கும்.
ஆகையால் குடியிருப்புகளுக்கும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் சென்டேஜ் கட்டணம் வசூலிக்கப்பட்டு தனித்தனியாக கேட்பு எழுப்பப்படும்.

அடுக்குமாடி குடியிருப்பு/ கூட்டு குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும்பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்புகள் ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக இணைப்புகள் கீழ்கண்டவாறு வழஙகப்படும்.

1 முதல் நான்கு குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருஙகுழாய் 1 எண்ணம்,
15 மி.மீ

5 முதல் 8 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருஙகுழாய் 2 எண்ணம்,
15 மி.மீ

9 முதல் 12 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 3 எண்ணம்,
15 மி.மீ

13 முதல் 16 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 4 எண்ணம்,
15 மி.மீ

17 முதல் 20 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 5 எண்ணம்,
15 மி.மீ

21 முதல் 40 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 6 எண்ணம்,
15 மி.மீ

41 முதல் 70 குடியிருப்பு வரை 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 7 எண்ணம்,
15 மி.மீ

70 குடியிருப்புகளுக்கு மேல் 20மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருநகுழாய் 8 எண்ணம்,
15 மி.மீ

**6)** கோவில்கள், மசூதிகள், மாதாகோவில்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் வணிக நோக்கத்திற்கு வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூல் செய்யப்படும்.

**7)** இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர்க் குழாய்களில் உள்ள நீர்விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளின் அளவு அவற்றில் பொருந்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும் குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அனுமதி பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்குத் தக்கவாறு கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1) 15 மி.மீ. குழாய் இணைப்பு 10 மி.மீ. திருகு குறுங்குழாய் (30மீட்டர் நீளம் வரை)
2) 20 மி.மீ. குழாய் இணைப்பு 15மி.மீ. திருகு குறுங்குழாய் (90மீட்டர் நீளம் வரை)

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்து தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும் எல்லா இணைப்புகளும் திருகு குறுங்குழாய் (Flow Control Valve) மற்றும் இதர துணைப்பாகங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15மி.மீக்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள்

இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக்குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை தலைமைப்பொறியாளர் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

9) அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளைச் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள், யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அனுமதி பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளைப் பார்வையிட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிடத் தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாத காரணத்தால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர்க் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிதறும் தண்ணீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர்க் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

10) அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கிப் பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.10/— வசூலிக்கப்படும்.

இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்திரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்பந்தப்பட்ட அலகு அலுவலகத்தில் பொறுப்பு பொறியாளரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின் மட்டுமே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது ஆணை விதியில் வரையறுத்துள்ள விகிதங்களின்படி குடிநீர்க்கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

1) உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டண வைப்புத்தொகை

அ) வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்று – ரூ. 7000 /–

ஆ) வீட்டுப் பயன்பாடின்றி வணிக நோக்கு இணைப்பு ஒன்று – ரூ. 20000 /–

இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்று – ரூ. 20000 /–

**ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத் தொகையை இருசம தவணைகளில் ஆறு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.மேலும் ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் அனைத்து இணைப்புகளுக்கும் வைப்புத் தொகை 10 % உயர்திதி வசுலிக்கப்படும்.**

12). உயர்த்தப்படவுள்ள குடிநீர்க் கட்டணம்

அ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 120/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் – ரூ. 12/–

ஆ) குடிநீர் வீட்டு பயன்பாடு இல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 300 /–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் – ரூ. 30/–

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 300/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் – ரூ. 30/–

மொத்தமாக குடிநீர் விநியோகிக்க (Bulk Supply of Water) கோரப்படும் இனங்களில் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

மேலும் ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் அனைத்து

இனஙகளுக்கும் குடிநீர் கட்டணம் 5 சதவீதம் உயர்த்தி வசுலிக்கப்படும்.

**13)** அ) அளவுமானி முறையிலான கட்டணத்தைக் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு திங்களும் 10ம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பைத் துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் குடிநீர்க் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டணம் செலுத்த தவறியவர்களிடம் இருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 30/– வீதம் அபராத கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணம் ரூ.500/–ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.500/–ம் ஆக மொத்தம் ரூ.1000/–ம் வசூல் செய்யப்படும். இத்தொகை குடிநீர் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தி மறு இணைப்பை பெற்றுக் கொள்ளத் தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

**14)** குடிநீர்பயன்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாகத் தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்புக் கட்டணம் ரூ.500/–ம் மறு இணைப்புக் கட்டணம் ரூ.500/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

குறிப்பு: இந்தத் துணை விதிகளில் வரும் காலாண்டு என்பது மூன்று

முழுத் திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

**15)** அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ.300/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்து மூலம் அறிவிப்பு செய்து கொள்ள வேண்டும்.

ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின் தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

**16)** குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளில் ஆணையர் மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

**17)** வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றுக் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்படும்.

**18)** குடிநீர்க் குழாய்களைத் தொட்டி அல்லது சேமிப்புத் தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

**19)** ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர்க் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும். பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று நகராட்சிப் பணியாளர்கள் முன்னிலையில் பழுது பார்க்க வேண்டும். மேலும், அதற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
